**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 69 / 2022**

**பி.வா.சா.1 – ராக்கு** **22.01.2026**

**குறுக்கு விசாரணை :–**

எனது அப்பாவின் அப்பா பெரியாம்பிள்ளையின் தகப்பனார் கருப்பணன் ஆவார். அந்த கருப்பணனுக்கு பெரியாம்பிள்ளை, வீரணன், சின்னனன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். பெரியாம்பிள்ளைக்கு நாச்சம்மை, நாச்சி, கருப்பணன் ஆகியோர் வாரிசுகள். நாச்சி என்பவர் எனது அப்பா உடன் பிறந்தவர் ஆவார். எனது அப்பாவிற்கு நான், தவமணி, முனியம்மாள், ராஜா ஆகியோர் வாரிசு என்றால் சரிதான். வீரணனுக்கு நாச்சி, கருப்பணன், முனியசாமி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். கருப்பணன் மகன் சின்னனனுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான், முதல் மனைவி பெயர் நாச்சம்மை, 2வது மனைவி பெயர் அய்யம்மாள் என்றால் சரிதான். மேற்படி நாச்சம்மைக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். மேற்படி அய்யம்மாளுக்கு ஆண்டி, கருப்பணன் வாரிசுகள் என்றால் சரிதான். நாச்சி, கருப்பணன் ஆகியவை எங்கள் குலசாமியின் பெயர் என்றால் சரிதான். நான் 2013ல் முனியசாமி, கருப்பணன் அம்பலம், காந்திமதி அம்மாள், பி,கே,நாச்சி, சின்னனன் மகன் ஆண்டி, சின்னனன் மகன் கருப்பணன் ஆகியோர் மீது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் கைப்பேசி வைத்துள்ளேன். அந்த கைப்பேசியில் யார் என்னை அழைக்கிறார்கள் நான் யாரை அழைக்கிறேன் என்று எனக்கு தெரியும். நான் வழக்கிற்காக படிப்பறிவு இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.கே.நாச்சி என்பவர் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 242/3 என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கருப்பணன் அம்பலம் மகன் பெரியம்பிள்ளை என பதிவு உள்ளது என்றால் சரிதான். அதில் பாகம் என்று உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 1 ஏக்கர் 8

செண்டில் பெரியாம்பிள்ளையின் பாகத்திற்கு மட்டும் தான் மேற்படி ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சின்னனன் பாகச்செய்க்கும் தெற்கு வீரணன் பாகச்செய்க்கும் கிழக்கு என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சின்னனன் அம்பலம் பொத்தவைச்செய்க்கும் தெற்கு, வீரணன் அம்பலம் பொத்தவைச்செய்க்கும் கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ல் சின்னனன் அம்பலம் பொத்தவைச்செய்க்கும் தெற்கு, வீரணன் அம்பலம் பொத்தவைச்செய்க்கும் கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். எனது அப்பா 1 ஏக்கர் 8 செண்டை எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 ஆவணங்களில் 1 ஏக்கர் 8 செண்டில் ஒரு பகுதி மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு 1 ஏக்கர் 8 செண்டையும் எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட்டின் அடிப்படையில் தான் தவறாக எனது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வட்டாட்சியர் முறையாக விசாரணை செய்து 1 ஏக்கர் 8 செண்டில் 35 செண்டுக்கு மட்டும் எனக்கு பட்டா வழங்கியுள்ளார் என்றால் நான் எனது தம்பிக்கு ஒரு பகுதியை எழுதிக்கொடுத்துள்ளேன். வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 அ பதிவேட்டில் சர்வே எண் 242/3 நாச்சம்மை பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண் 242/7 பெ.கருப்பணன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் முனியசாமி பெயரில் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.177/2022 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி 06.10.2008ல் சி. நாச்சம்மை என்பவரிடமிருந்து வாதி கிரையம் வாங்கியது தெரியும் அது செல்லாது. அந்த கிரைய பத்திரத்தில் வாதி சர்வே எண் 242/3 விஸ்தீரணம் 35 செண்டு கிரையம் வாங்கியுள்ளார்

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த கிரைய பத்திரத்தின் அடிப்படையில் வாதி பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியாது. அந்த பட்டாவின் அடிப்படையில் 1415 முதல் 1431 வரையான பசலிக்கு வாதி வரி செலுத்திய விபரம் எனக்கு தெரியாது. அதன்பிறகு வாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய நான் மனுக்கொடுத்து வாதி பெயரிலுள்ள பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். பட்டா ரத்து செய்தது சம்மந்தமாக வருவாய்துறை தரப்பில் எந்த அறிவிப்பும் வாதிக்கு அனுப்பப்பட்டதாக என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியை வருவாய்துறையில் விசாரித்தார்களா என்று எனக்குதெரியாது. நான் எனது அதிகாரத்தை பயன்படுத்தி வாதி பெயரிலுள்ள பட்டாவை ரத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு எந்த பாத்தியமும், உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்று எதிர்கோருரிமை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது எதிர்கோருரிமையை நிரூபிக்க தகுந்த ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமை தள்ளுபடிக்குரியது என்றும் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை